UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980 -7- [illegible]
PERIODICALS DIVISION
LIBRARY

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | ஆடி 26 | [illegible] 26 | இதழ் 151
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 10-7-80

## தமிழ் அரச ஊழியர் சிங்களம் கற்பதற்கு சம்பளத்துடன் லீவு

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தமிழ் அரசாங்க ஊழியர்கள் உத்தியோக மொழியான சிங்கள மொழியைக் கற்பதற்காக முழுச் சம்பளத்துடன் கூடிய ஆறுமாத லீவு வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அமைச்சரவையின் வாராந்தக் கூட்டம் நேற்று நடைபெற்ற பின்னர் கூட்டம் பற்றிய செய்திகளை வெளியிடும் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸநாயக்க இத்தகவலை வெளியிட்டார்.

பதவியில் சேர்ந்து மூன்று வருடங்களில் உத்தியோக மொழியில் சித்தியடைய வேண்டும் என்பதில் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள்

# அடுத்தமாதம் ஆரம்பமாகும்?

## 24 மாவட்டங்களுக்கும் வெவ்வேறு தினங்களில்

### சட்டமூலம்பற்றி வில்சன் ஆராய்வார்

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை தொடர்ந்து நடைபெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருபத்துநான்கு மாவட்டங்களுக்குமான அபிவிருத்திச் சபைகளின் தேர்தல்களையும் ஒரேநேரத்தில் நடாத்துவதில் சிரமம் ஏற்படும் எனக் கருதப்படுவதாலேயே இரண்டு, மூன்று மாவட்டங்களாக ஆகஸ்ட் மாதம்முதல் டிசம்பர்மாதம் வரையிலான காலப்பகுதியில் நடாத்த அரசு விரும்புவதாகவும் தெரியவருகிறது.

உத்தேச மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவில்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அங்கம்வகித்த கலாநிதி நீலன் திருச்செல்வம் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலேயே மாவட்ட அமைச்சர்களின் பங்கு அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட அமைச்சர்கள் சபையில் உறுப்பினர்களாக இருக்கமாட்டார்கள் என்றும் தவிசு சபையில் உரையாற்றும் உரிமை உட்பட சபைகளின் முகாமை, ஒருங்கிணைப்பு என்பவற்றிற்கு பொறுப்பாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலாநிதி நீலனின் அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட அமைச்சர்களின் பங்கு இருக்குமானால் அப்பதவியை கூட்டணியினர் பொறுப்பேற்பார்கள் என்று கூறப்படுகிறது.

#### வில்சன் இன்று வருகிறார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் அங்கம் வகித்த மறைந்த தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மருமகன் பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் இன்று அமெரிக்காவிலிருந்து கொழும்பு வருகிறார். இச்சபை தொடர்பாக தயாரிக்கப்படவுள்ள சட்டமூலம் பற்றிய இறுதி ஆய்வில் அவர் கலந்துகொள்வார். (ப-ர)

## புகையிரத சேவையில் சீர்குலைவு!

### சிக்னல்கள் சரியாக இயங்காமையால்

(கொழும்பு)

புகையிரத சேவைகள் சீர்குலைந்திருப்பதாக புகையிரத திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று இரவு கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை புறப்படும் தபால் புகையிரதம் இரவு 9 மணிக்குப் பின்னரே புறப்பட்டது.

மாணிக்கவத்தை தவிர்ந்த வேறிடத்தில் வேலைநிறுத்தம் எதுவும் நடைபெறவில்லை என்று தெரிவித்த அந்த அதிகாரி, பாதையிலுள்ள சிக்னல்கள் எதுவும் சரியாக இயங்கவில்லை என்றும் தெரிவித்தார்.

புகையிரதப் பகுதி ஊழியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று வேலைநிறுத்தப் போராட்டம் நடாத்தவுள்ளதாக தெரிவித்துள்ள அதே வேளையில் நேற்றும் இன்றும் சிற்றூழியர்கள் [illegible] வேலைத்தலத்திலிருந்து வெளிநடப்புச் செய்துவருகின்றனர்.

(ப-ரு)

## சட்ட மூலங்கள் நிறைவேறியது

(கொழும்பு)

தொழிலமைச்சர் சட்டமன்றம் சிறில் மத்தியூ ஜே. செனவிரத்தினவால் சமர்ப்பிக்கப்பட்ட "வேலைநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள்" தொடர்பான சட்ட மூலமும், சமூக சேவைகள் அமைச்சர் திரு அசோகா கருணாரத்தினவினால் சமர்ப்பிக்கப்பட்ட "தொண்டர் சமூக சேவைகள் ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்தும்" சட்ட மூலமும் நேற்றும் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. (ரு)

## "தேர்தல் வாக்குறுதிகள் 5 ஆண்டில் நிறைவேறும்"

### தமிழக முதல்வர் சபையில் அறிவிப்பு

சென்னை, ஜூலை 9

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற ஐந்து ஆண்டுகளில் முயற்சி எடுக்கப்படும் என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இன்று சட்ட சபையில் கூறினார்.

புதிய வரவு செலவுத்திட்ட விவாதத்திற்கு நிதியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் பதிலளித்து உரையாற்றிக்கொண்டிருந்தபோது குறுக்கிட்டுப் பேசிய முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்நாட்டில் வறுமையின் எல்லைக்கோட்டில் இரண்டு கோடி மக்கள் இருந்தார்கள். அவர்களின் வறுமையைப் போக்க சகலரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும்.

"அ. தி. மு. க. அரசு, அதன் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற அதன் ஆட்சிக்காலம் [illegible] முழுவதும்" என்று கூறினார். ( )

## அமைச்சர் உட்பட 232 பேர் பதவி நீக்கம்

டெஹ்ரான், ஜூலை 9

நாசவேலை மற்றும் ஒழுங்கீனங்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின்பேரில் ஒரு அமைச்சர் 6 பிரதியமைச்சர்கள் உட்பட 232 சிரேஷ்ட அதிகாரிகளை தெஹ்ரானிய அரசாங்கம் பதவிநீக்கம் செய்துள்ளது.

பதவிநீக்கம் செய்யப்பட்டவர்களில் மூன்று மாகாணங்களின் ஆளுனர்களும் அடங்குவர். (ரு)

## "தேர்தல் வாக்குறுதிகளுக்கு முரணாக செயல்படுகிறது"

### எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

அ. தி. மு. க. அரசு, தேர்தல் வாக்குறுதிகளுக்கு முரணான வகையில் செயல்பட்டு வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி குற்றம் சாட்டினார்.

புதிய வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தின்போது திரு. கருணாநிதி பேசுகையிலேயே மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

திரு. கருணாநிதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் நாட்டில் வறுமையின் எல்லைக் கோட்டில் ஏழு கோடி மக்கள் இருக்கின்றபோதிலும் இரண்டு லட்சம் மக்களுக்கு மட்டுமே ஒருநேர அரிசியை இலவசமாக [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## பேரவை பொதுச்சபை மட்டுநகரில் கூடுகிறது!

### யாழ்ப்பாணத்தில் கூட்டம் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச் சபைக் கூட்டம் இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

அமைப்புச் செயலாளர் திரு இரா. வாசுதேவா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் நிர்வாகச் செயலாளர் திரு. இறைகுமாரன் உட்பட சகல பொதுச்சபை உறுப்பினரும் கலந்து கொள்ளுவார்கள்.

இளைஞர் பேரவையினர் இரு பிரிவாக பிரிந்து யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் கூட்டங்களை நடாத்த தீர்மானித்திருந்தார்கள். இம்மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் ஒரு குழுவினர் நடாத்த விருந்த பொதுச்சபைக் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டதை யடுத்தே மட்டக்களப்பில் நடைபெறும் கூட்டத்தில் சகல உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். அக்கூட்டத்தில் மாவை சேனாதிராசாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பிற்கு செல்லும் குழுவினர் அங்கு மாவை சேனாதிராசாவுக்கு ஆதரவு தேடும் முயற்சியில் ஈடுபடவுள்ளனராகவும் தெரியவருகிறது.

(ரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இவ்வொரு பாவிக்கப்பட்ட டீசல் மோரிஸ் LD 5 வாகனம் விற்பனைக்குண்டு. விலை ரூபா 62,000/- 37 தங்க வேலி, கண்டிக்குளி, போன்: 8171. இண்டர்நேஷனல் மெரம்பணி, 295 காலி வீதி, கொள்ளுப்பிட்டி, போன்: 37697. (6167)

### தேவை

வவுனியா, வாரிக் குட்டியூர் பூவரசு வமத்தில் எமது சமாதிராவாகத்தில் ஒரு கணக்காளர் உடனடியாக தேவைப்படுகிறார். குடும்பஸ்தராயிருப்பின், அவருக்குரிய தங்குமிடம் போன்ற வசதிகள் பூரணமாக உண்டு பள்ளிக்கூடவசதிகள் மிக அருகில் உள்ளன. கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் விண்ணப்பதாரர்கள் நேரில் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர் கே. நாகமுத்து அன் சன்., 48 - 50A பெரியகடை. யாழ்ப்பாணம். 6254

### வகுப்புகள்

G C E. (O/L) மாணவருக்கும் பிறநாடு செல்பவர்களுக்கும் ஆங்கில இலக்கணம் எகஸ் ஸிபஸ் EMMA) (MCBETH) ஆங்கிலம் பேச்சு Spoken English தனிப்பட்ட முறையாயும் வீடு சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். கடிதத் தொடர்பு நம். 6186, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6186

## யாழ். மாவட்ட கி. சே. அலுவலர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கிராம சேவை அலுவலர்கள் சங்கத்தின் 17-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் இம்மாதம் 12ந் திகதி காலை, யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## மானி. தொகுதி கல்விவளநிலைய அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தேர்தல் தொகுதிக் கல்விவளநிலைய அங்குரார்ப்பணக்கூட்டம் இம்மாதம் 14ம் திகதி மாலை, கலாசாலை இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கல்வித் திணைக்கள அதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு தி மாணிக்கவாசகர் உட்படப் பலர் உரையாற்றுவர். (கெ-வ)

## அறிவித்தல்

### தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் கொடிகாமம்

இச் சங்கத்திற்கு சொந்தமான புதிய 26ஸ்ரீ3870 இலக்க டாட்டா பென்ஸ் 1210 லொறி கேள்விப்பத்திரமூலம் விற்பனை செய்யப்படும். வைப்புப்பணம் ரூபா 1000/-ம், கேள்விப் பத்திரப்பணம் ரூபா 25/-ம் சங்கத்தில் செலுத்தி கேள்விப் பத்திரம் பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட பத்திரங்களை யாவும் பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் என்ற விலாசத்திற்கு 30-7-80வரை பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் கடித உறை மேலுறையிட்டு இடது பக்க மேல்மூலையில் "லொறி விற்பனை கேள்விப் பத்திரம்" என எழுதப்படவேண்டும். காரியாலய நேரத்தில் லொறியை பார்வையிடலாம்.

லொறி விற்பனை சம்பந்தமான சகல விதிமுறைகளும் மேற்படி சங்க நெறியாளருமுதியே உண்டு

தலைவர்
தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்,
04-07-80. 6236

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட ஆணையாளராக டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைமைப்பீடத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உடஇலங்கை சுதேச வைத்திய சபையின் செயலாளரும் யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி உபஅதிபருமாவார். ஐகலாலே இராம அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவராகவும் சில்லாலை திருமறை ஆலய பங்குச் சபையின் செயலாளராகவும் கடமையாற்றும் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடபிரதேச வைத்திய அதிகாரியாகவும் பணியாற்றி வருகின்றார். (வ)

## ஆங்கில தட்டச்சு இயந்திரம் (அன்டவூட் Underwood 13½")

### விற்பனை

முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது பாவனையிலுள்ள மேற்கூறப்பட்ட ஆங்கிலத் தட்டச்சு இயந்திரம் ஒன்று விற்பனைக்காக இத்தால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1980 ஆடி 30-ந் திகதி நண்பகல் 12மணிக்கு முன்பு எனக்குக் கிடைக்கக் கூடியதாக கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

கேள்விப் பத்திர கடித உறையின் இடதுபக்க மூலையில் "ஆங்கில தட்டச்சு இயந்திரம் கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக ரூபா 10 பத்தை செலுத்துதல் வேண்டும். எக்கேள்விப் பத்திரங்களையும் காரணமிகாட்டாது நிராகரிப்பதற்கு சங்கத்திற்கு உரிமை உண்டு. விற்பனைக்காக இருக்கும் தட்டச்சு இயந்திரத்தை சங்க அலுவலகத்தில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

ஒப்பம்
செ. செபமணி,
தலைவர்.

முல்லைத்தீவு
க. தொ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு,
07-07-1980. 6262

## வீடமைப்பு நிர்மாணத்துறை

# நடமாடும் காரியாலயத்தில் மக்கள் குறைதெரிவித்தனர்

(மாவிட்டபுரம்)

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் நடமாடும் காரியாலயம் கடந்த செவ்வாய்க்கிழமையன்று வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது மக்கள், அரசாங்க அதிகாரிகளை நேரில் சந்தித்துத் தமது குறைகளை எடுத்துக் கூறினர்.

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அ. ரன் அகபிரம் தலைமையில் நடைபெற்ற இந்நடமாடும் காரியாலயத்தில் காங்கேசன்துறை பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு. க சண்முகநாதன், மயிலிட்டிக் கிராமசபை விசேஷ ஆணையாளர் திரு. எம். இராஜரத்தினம், தெல்லிப்பழை-மல்லாகம் கிராமசபை விசேஷ ஆணையாளர் திரு. க. மகாதேவா, கட்டடத் திணைக்களப் பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர், தேசிய வீடமைப்புத் திணைக்கள உதவி ஆணையாளர், நீர் விநியோக வடிகால் அமைப்புச்சபை முகாமையாளர், கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபன முகாமையாளர் உட்பட மற்றும் சில அரசாங்கத்துறை அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர்.

பொதுமக்கள் தமது பல்வேறுபட்ட குறைகளை இந்த அதிகாரிகள் முன் எடுத்துக் கூறினார்கள். வீடமைப்புத் திட்டங்கள், குடிநீர் வழங்கல் திட்டங்கள் போன்றவை பற்றி எடுத்துக்கூறப்பட்டன. இவை குறித்துத் தாம் ஆவன செய்வதாக அவர்கள் உறுதியளித்தனர். வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா இந்நிகழ்ச்சியை ஒழுங்குசெய்திருந்தார்.

## வவுனியாவில் நடைபெறும் கருத்தரங்கு

(வவுனியா)

சர்வதேச பெருந்தோட்டத் தொழிற்சங்க சம்மேளனம் பிரடெரிக் மன்றம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூன்றும் இணைந்து கருத்தரங்கு ஒன்றினை வவுனியாவில் நடத்தி வருகின்றன.

6-ம் திகதி ஆரம்பமான இக்கருத்தரங்கு ஒருவார காலத்திற்கு நடைபெறுமென்த் தெரியவருகிறது. மூன்று நிறுவனங்களையும் சேர்ந்த 25 டெலிகேட்டுகள் இக்கருத்தரங்கில் பங்கு கொள்ளுகின்றனர்.

இடம்பெயர்ந்து வவுனியாவில் வந்து குடியேறியுள்ள தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகளே இங்கு ஆராயப்பட்டு வருகின்றன. இருப்பிடவசதி காணிப்பங்கீடு உணவுமுத்திரை போன்ற விஷயங்களில் அவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணும் வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டுவருகிறதாம். (க)

## 11கி. மு. சங்கங்கள் உதவி பெற்றன

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை தொகுதியில் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான நிதியுதவியின் கீழ் 11 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு விவசாய தெளிகருவிகளும் 2 கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கு தையல் மெஷின்களும் வழங்கப்பட்டுள்ளன.

விவசாய தெளிகருவிகள் பெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் பலாலி, குரும்பசிட்டி, தையிட்டி கிழக்கு, பளை, கத்தியதத்தை, வீமன்காமம், மல்லாகம், அளவெட்டி கணேசபுரம், நீலாவத்தை, தந்தை செல்வா, கருகம்பானை, மயிலங்கூடல், இளவாலை, சித்திரமேழி, மாவைக் கிழவனதிலர் ஆகிய கிராம அபிவிருத்திச் சங்கங்களாகும்.

மாவை கி. மு. சங்கம், அளவெட்டி வடக்கு கி. மு. சங்கம் ஆகியன தையல் மெஷின்களை பெற்றன. அளவெட்டியைச் சேர்ந்த அனாதைக் குடும்பமொன்றிற்கும் தையல் மெஷின் வழங்கப்பட்டது. (வ)

## சத்திரசிகிச்சை நிபுணர் பெஞ்சமின் யாழ். திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அமெரிக்காவிலும் மேற்படிப்பை முடித்துக்கொண்டு திரும்பியுள்ள பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் வி. ஏ. பெஞ்சமின் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். (த)


## வருடாந்தக் கூட்டம்

யாழ் / ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டம் 27-07-1980 ஞாயிறு காலை 9 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறும்.

6267 அதிபர்

## விற்பனைக்கு

தேங்காயெண்ணெய்,
தேங்காய்ப் பிண்ணாக்கு
மொத்தமாகக் கொள்வனவு செய்வோர்
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
S. K. I. எண்ணெய் ஆலை,
தொழிற்பேட்டை, அச்சுவேலி.
தொலைபேசி. இல: 226 அச்சுவேலி 6256

## AL, OL பரீட்சையில் திறமைச் சித்தி நிச்சயம்

# தொழில்முறை இரசாயனம்

வளி, கடல், புவி ஆகிய வளங்கள் பற்றி விரிவாக அடங்கியுள்ளது

ஆசிரியர்: T. நாகரெத்தினம், B Sc - Ceylon

விலை 5/- V. P. P. உண்டு

வெளியீட்டாளர்கள்:

மாக்மிலன் புத்தகசாலை,
673, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
எல்லா பிரதம புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




## சில நிமிடங்களில் கிருமிப் பீடைகளை ஒழிப்பது

# எக்கலக்ஸ்-25

தேயிலை, நெல், பருத்தி, கனி மரங்கள், காய்கறி மற்றும் பயிர்களில் பாவிக்கச் சிபாரிசு செய்யப்படுகிறது




| | |
|---|---|
| 50 மி. லிற் | 12.50 |
| 200 மி. லிற் | 42.00 |
| 450 மி. லிற் | 89.65 |
| [illegible] | [illegible] |

இறக்குமதியாளர்கள்:
ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
62, ஜெதவன வீதி,
கொழும்பு 14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பூச்சியாவுக்கு அங்கீகாரம்—வல்லரசு ஆதிக்கமற்ற

# வெளிநாட்டு கொள்கையை இந்தியா கடைப்பிடிக்கிறது

## சோவியத் யூனியன் பாராட்டு

மைசூர், ஜூலை 9

இந்தியா வல்லரசு ஆதிக்கமின்றி சுயேச்சையான வெளியுறவுக்கொள்கையைப் பின்பற்றுகிறதென்பதற்கு கம்பூச்சிய அரசை அங்கீகரித்தது ஒரு நல்ல உதாரணமாகும்.

கம்பூச்சிய அரசை ஆதரிப்பதென இந்தியா மேற்கொண்ட முடிவை வரவேற்றபோது சோவியத் யூனியனே மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டது.

சோவியத் நாடும் இந்தியாவின் இந்த நடவடிக்கையை ஆதரித்துள்ளது.

### இந்தியாவின் முடிவுக்குக் காரணம்

இந்தோ சீனாவில் இந்தியாவின் முடிவை தென்கிழக்காசிய சில நாடுகள் கண்டித்துள்ளன.

சோவியத் ரஷ்யாவில் சிறுசிறந்த கம்பூச்சியாவில் பொலிஸ் தாரத்தை மேம்படுத்த உதவுமாறு தென்கிழக்காசிய நாடுகள் சர்வதேச சமுதாயத்தைக் கேட்டுள்ளது. [இ]

## சீன - இந்திய உறவு பாதிப்படையாது

### இந்தியா நம்பிக்கை

புதுடில்லி ஜூலை 9

ஹெங்சமரினது கம்பூச்சிய அரசை இந்தியா அங்கீகரித்துள்ளமையினால் சீன-இந்திய உறவு எக்கருத்திலும் பாதிக்கப்படமாட்டாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இதன் எதிரொலியாக இவ்வருட பிற்பகுதியில் சீன வெளியுறவு அமைச்சர் திரு. குவாங்குவா மேற்கொள்ளும் இந்திய விஜயம் ரத்துச்செய்யப்படும் எனத் தாம் நம்பவில்லையென இந்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தோ சீனாவில் ஆசியானின் ஸ்தாபக நாடுகளான பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளை சிறந்த அரசியல் பொருளாதார உறவுகளை வைத்திருக்கவே இந்தியா விரும்புகிறது என்றும் அந்த அதிகாரி கூறினார். [இ]

## இந்தியலோகசபையில் எதிர்க்கட்சி வெளிநடப்பு

### கூச்சலுடன் வாக்குவாதம்

புதுடில்லி, ஜூலை 9

இந்திய லோகசபையில் நேற்று ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையே ஏற்பட்ட பலத்த வாக்குவாதத்தையடுத்து எதிர்க்கட்சியினர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

சுமார் அரைமணி நேரமாக வாக்குவாதம் நடைபெற்றபோது சபையில் கூக்குரல் எழுந்தவண்ணமே இருந்தது. பெண்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் பொலிசார் கொடுமைகள் இழைத்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றுக்கு சபாநாயகர் அனுமதி மறுத்ததை அடுத்தே சபையில் வாக்குவாதம், கூச்சல் ஏற்பட்டு எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர். [இ]

## போதைவஸ்து விற்ற 8 பேர் வீதியில்சுட்டுக் கொலை!

தெஹ்ரான், ஜூலை 9

ஈரானில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட எட்டு ஈரானிய பிரஜைகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

தெற்கு தெஹ்ரானில் உள்ள வீதியொன்றில் வைத்து இவர்கள் எல்லோரும் பகிரங்கமாக சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

### 130 பெண்கள் வேலை நீக்கம்

இதேவேளையில் புதிய இஸ்லாமிய மத உடைகளை அணியவேண்டும் என்ற ஈரானியஅரசின் கொள்கைகளுக்கு எதிராக எதிர்ப்பு உடை அணிந்து வந்த பொலிஸ் இராணுவத்துறைகளில் பணிபுரியும் 130 பெண்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். [இ]

## கிருஷ்ணநதி பெருகியது

மைசூர், ஜூலை 9

கர்நாடக மாநிலத்தில் கிருஷ்ணநதி பெருக்கெடுத்து பல கிராமங்கள் மூழ்கியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## கும்பாபிஷேகம்

(மட்டக்களப்பு)

மட்டுநகர் அம்பலாந்துறை சித்திவிக்னேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 13ந் திகதி காலை நடைபெறும் கும்பாபிஷேகக் கிரியைகளை மாதகல் கிவாச்சாரிய சிரோமணி சிவஸ்ரீ சந்திர வேதிகுருக்கள் நிறைவுசெய்து வைப்பார். (வ)

## இன்று திருநிலைப்பாடு

(கருப்பிட்டி)

கரவெட்டியைச் சேர்ந்த அருட், செல்வன். பிலிப் அன்றன் சின்னராசா இன்று வியாழக்கிழமை யாழ். ஆயர் பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார். இவ்வைபவம் கரவெட்டி பரலோக மாதா ஆலயத்தில் நடைபெறும். கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட அருட். செல்வன் சின்னராசா உயர் கல்வியை யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் பெற்றார்.

இவர் மெய்யியல் படிப்பை யாழ். புனிதமடுத்தீனார் குருமடத்திலும், பட்டப்படிப்பை பூனேயிலுள்ள புனித பாப்பரசர் கல்லூரியிலும், இறையியல் கல்வியை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் பயின்றார். (வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

